**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் (Heritage Heights) எனும் பகுதியை வளர்ச்சிபெற வைப்பதற்கான திட்டத்தினை ப்ராம்ப்ட்டன் நகர்மன்றம் ஆமோதிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்டு 7, 2020) – ஆகஸ்டு 5, புதன்கிழமையன்று நடைபெற்ற சந்திப்புக் கூட்டத்தில், ப்ராம்ப்ட்டன் நகரில் வளர்ச்சியடையாமல் இருக்கும் கடைசி பகுதியாக இருக்கின்ற ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் எனும் பகுதியை வளர்ச்சி பெற வைப்பதற்கான திட்டத்தினை ஆமோதிப்பு செய்தது.

4000 ஏக்கர்கள் பரப்பளவில் அமைந்ததும், ப்ராம்ப்ட்டன் நகரின் மொத்த நிலப்பரப்பில் 1/16 பங்கினை பிரதிநிதிப்படுத்துவதாகவும் இருக்கின்ற, இந்த ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் என்னும் பகுதியானது ப்ராம்ப்ட்டன் நகரின் வடமேற்கு பகுதியில் இருக்கிறது. இது மேஃபீல்ட் சாலையில் இருந்து கிரெடிட் ரிவர் பள்ளத்தாக்கு வரையும், வின்ஸ்ட்டன் சர்ச்சில் புலிவார்ட்-இல் இருந்து மிஸ்ஸிஸ்ஸாகா சாலை வரை பரந்து விரிந்திருக்கிறது. இந்த திட்டமானது ப்ராம்ப்ட்டன் 2040 எனும் தொலைநோக்கு திட்டத்தின் கீழாக, புதியதொரு நகர மையத்திற்கான முன்மொழிவாக எடுத்துரைக்கப்பட்டது – இதில் தொழில்கள் மற்றும் குடியிருப்பு ஆகியவை கலந்த முழுமையானதொரு சேவை மையமாக இருக்க எடுத்துரைக்கப்பட்டது. ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் எனும் இந்தப் பகுதியை வளர்ச்சி பெற வைப்பதற்கான திட்டமானது, எதிர்காலத்தில் இங்கு குடியேறவிருக்கும் மக்கள் மற்றும் பணியாளர்கள் ஆரோக்கியமான மற்றும் உயர்ந்த தரமான வாழ்க்கைப் பாவனையுடன் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான மிகச்சிறந்த அமைவிடமாக இருக்கும். இது சமுதாயத்தினரின் மிக அதிக அளவிலான ஈடுபாட்டின் அடிப்படையில் அமைவதாக இருக்கும்; மற்றும் வசிப்பது, பணியாற்றுவது, கல்விகற்பது, மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபடுவது போன்றவற்றுக்குத் தேவையான, நிலைத்து நிற்கவல்ல, துடிப்பான ஒரு கட்டமைப்பை அமைத்துக் கொடுக்கும்.

ஹெரிடேஜ் ஹைட்ஸ் பகுதியை வளர்ச்சிபெறச்செய்வதற்காக ஆமோதிப்பு கொடுக்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழாக, ப்ராம்ப்ட்டன் நகருக்கு வீட்டுவசதி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கான கணிசமான வளர்ச்சி வாய்ப்புகள் உள்ளன. முன்மொழியப்பட்ட ஒரு GO நிலையம் மற்றும் இணைக்கப்பட்ட சாலை வழிகள் மற்றும் திறந்தவெளிகள் உள்ளிட்ட, உயர் ரக போக்குவரத்து வசதிகளை அணுகக் கூடிய வகையில் பலவிதமான வீட்டு வசதி விருப்பத்தெரிவுகளை இந்த திட்டம் தன்னுள்ளே கொண்டிருக்கிறது. முன்மொழியப்பட்ட ஜி.டி.ஏ மேற்கு போக்குவரத்து தாழ்வாரத்திற்கு (GTA West Transportation Corridor) பதிலாக பிரத்யேகமாக டிரக்குகள் மட்டும் சென்று வரும் தடம் உட்பட தென்வடலாக நீளவிருக்கும் நகர்ப்புற நெடுஞ்சாலையும் இந்த திட்டத்தின் மையமாக அமையும். இந்த பிரதான புலிவார்டு அமைப்பானது சமுதாய மக்களுக்கான நகர்ப்புற கலப்பு-பயன்பாட்டை உருவாக்கும்; இதில் அங்கு குடியிருப்பவர்கள் மற்றும் வருகை தருபவர்கள் ஷாப்பிங் செய்யலாம், உள்ளூர் உணவகங்களில் உண்டு மகிழலாம், புதிய ஒரு தொழில் துவங்கலாம் மற்றும் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான மற்றும் துடிப்பான வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாக இருக்கலாம். முன்மொழியப்பட்ட நலன் தரும் மாவட்டமாக இருக்கப்போகும் இதில், எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஒரு மருத்துவமனை மற்றும் கூடுதல் மருத்துவ உதவி சேவைகள் ஆகியவற்றுக்கு நிலங்களை உள்ளடக்கிய இந்தப் பகுதியானது, பிரதான நெடுஞ்சாலையின் போக்கில் அமைந்துள்ளது. இந்த திட்டமானது அனைத்து

வசதிகளும் இணைக்கப்பட்டதாக, நவீன சமுதாயத்தை அபிவிருத்தி செய்வதாக இருப்பதுடன், சுற்றுச்சூழல் வகையில், அதனுடன் இசைவோடு இருக்கும் முறையில் மேற்கொள்ளப்படும்.

அமையவிருக்கும் ஹெரிடேஜ் ஹைட்ஸ் பகுதியின் வளர்ச்சியானது ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளின் கருத்துக்களை பிரதிபலிப்பதை உறுதி செய்வதாக இருக்கும்; நகரின் வளர்ச்சியுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் சேர்ந்து தனது பரந்துபட்ட பொதுமக்கள் ஈடுபாடு கொள்ளும் செயல்முறையை நகர நிர்வாகம் தொடர்ந்து மேற்கொள்ளும். நகர நிர்வாகமானது, அவசியமான தொழில்நுட்ப ஆய்வுகளையும் மேற்கொள்வதோடு, அரசாங்கத்தின் பிற மட்டங்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்படும்; திருத்தம் செய்யப்பட்ட இரண்டாம் நிலை திட்டத்தை அடையும் இலக்கை மனதில் கொண்டு, இந்த செயல்முறையின் அடுத்த கட்டம் 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவடையும்.

ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் பகுதி பற்றிய மேலும் தகவல்கள் மற்றும் இந்தப் பகுதிக்கான நகர நிர்வாகத்தின் திட்டமிடல் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/nwbrampton.

**அறிஞர் கூற்றுக்கள்**

“குடியிருப்பாளர்கள் உயர்தர வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையிலான முழுமையான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் இணைக்கப்பட்ட சமூகங்களை உருவாக்குவதை அனுமதிப்பதே நகர சபைக்கு முன்னுரிமை கொண்ட விஷயமாகும்; மேலும் நமது ப்ராம்ப்ட்டன் 2040 என்னும் தொலைநோக்குப் பார்வையை அடைய உதவுவதில் இது மிகவும் அவசியமாகும். ப்ராம்ப்ட்டன் நகரிலேயே வளர்ச்சியடையாத கடைசி பகுதியாக இருக்கின்ற ஹெரிடேஜ் ஹைட்ஸ் பகுதியை அதன் அடித்தளத்திலிருந்தே உருப்பெற செய்வதற்கான ஒரு அற்புதமான வாய்ப்பு இதுவாகும். இந்த கருத்தாக்கத் திட்டமானது அதைச் செய்யும் என்று நான் நம்புகிறேன்; அதன் மூலம், வேலைவாய்ப்புக்கள், மலிவு விலை வீடுகள் ஆகியவற்றைக் கொண்டு வருவதுடன், ப்ராம்ப்ட்டன் நகரின் வடமேற்கு பகுதியில் வாழ, வேலை செய்ய, கல்வி கற்க மற்றும் விளையாடி மகிழ்வதற்கான வாய்ப்பையும் கொண்டுவரும்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நகர நிர்வாகமானது ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளிடமிருந்து அவரவர் பெற்ற அனுபவம் மற்றும் பின்னணியை தெரிந்துகொள்ள அவர்களை நாடியது; அந்த விதமாகக் கிடைத்த ஒத்துழைப்பு, நிச்சயமாக ஹெரிடேஜ் ஹைட்ஸ் பகுதியின் வளர்ச்சித் திட்டத்தில் பிரதிபலிக்கிறது. 2040க்கான தொலைநோக்குப் பார்வையானது, அனைத்து வளர்ச்சியையும் ஒட்டுமொத்தமாகப் பார்ப்பது உட்பட, நாம் எவ்வாறு திட்டமிடுகிறோம் என்பதில் இருக்கின்ற உண்மையான மாற்றத்தைக் கொண்டுவருகிறது. ஹெரிடேஜ் ஹைட்ஸ்-க்கான திட்டமானது இந்த இலக்குகளை அடைவதற்கான ஒரு முக்கிய பகுதியாகும், அதை ஆமோதிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்"

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4, தலைமைப்பொறுப்பு, திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஹெரிடேஜ் ஹைட்ஸ் என்பது ஒரு முன்னோக்கியவாறான சிந்தனை, மற்றும் அழகான கருத்தோட்டமான சமூகத்தை வளர்ப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பாகும், இதன் பேரில் அனைத்து ப்ராம்ப்ட்டன்வாசிகளும் பெருமைப்படலாம். பொதுமக்கள் மற்றும் உற்சாகமான பங்குதாரர்களை நாங்கள் தொடர்ந்து ஒருசேர ஈடுபடுத்துகையில், அவர்களின் ஆர்வம் மற்றும் அற்புதமான பங்களிப்புகளுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ப்ராம்ப்ட்டன் நகர மக்கள் மிகச் சிறந்தவற்றையே அடைய தகுதியானவர்கள்; இந்த கருத்துத் திட்டம் பல வகைகளில் அவற்றை வழங்குகிறது.

*- பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8 , துணைத் தலைமைப்பொறுப்பு, திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஹெரிட்டேஜ் ஹைட்ஸ் பகுதிக்கான எதிர்காலத்தை வடிவமைக்க உதவுவதற்காக பாடுபடும் பங்களிப்பாளர்கள், நில உரிமையாளர்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரில் வசிப்பவர்கள் ஆகியோருடன் நாங்கள் கூட்டாக பணியாற்றி வந்திருக்கிறோம். இந்த கருத்துருவாக்கத் திட்டமானது, நிலங்களை ஒரு முழுமையான ஒரு அங்கமாக வளர்ச்சிபெற வைக்கும் ஒரு தொலைநோக்குப் பார்வையை உள்ளடக்கியது மற்றும் எதிர்காலத்தில் நிலையான, துடிப்பான மற்றும் கட்டுபடியாகும் செலவில் கிடைக்கும் வளர்ச்சியைத் திட்டமிடுவதற்கான ஒரு திசையை சுட்டிக்காட்டுகிறது. இந்த திட்டத்தை ஆமோதிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் வடமேற்கு ப்ராம்ப்ட்டனில் வாழக்கூடிய மற்றும் இணைக்கப்பட்ட சமூகத்தை வழங்க அனைத்து தரப்பினரையும் தொடர்ந்து ஈடுபடுத்துவோம். ””

*- மைக்கேல் பல்லேஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர், 2 மற்றும் 6, டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 மற்றும் 6 , ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் குடியிருப்பு வாசிகளின் தேவைகளையும் யோசனைகளையும் பிரதிபலிக்கும் ஒரு சமூகத்தைத் திட்டமிடவும் கட்டமைக்கவும் நகர நிவாகத்தில் இருக்கும் எங்களை உற்சாகப்படுத்துகிறது, மேலும் ஹெரிடேஜ் ஹைட்ஸ்-க்கான வளர்ச்சித் திட்டம் அதைச் செய்யவைக்க ஒரு படி மேலே செல்கிறது. வசிக்கத்தக்க, இணைக்கப்பட்ட மற்றும் முழுமையான சமூகத்தை உருவாக்கும் குறிக்கோளுடன் ஹெரிடேஜ் ஹைட்ஸ்-க்கான இரண்டாம் நிலைத் திட்டத்தை திருத்தும் நோக்கத்துடன் குடியிருப்பாளர்கள், நில உரிமையாளர்கள் மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்களுடன் தொடர்ந்து ஈடுபடுவதை நகர அலுவலர்கள் எதிர்நோக்குகின்றனர்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

BRAMPTON

Media Release

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*